# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● ஏப்ரல் 08, 2023 Weekly E-paper ● April 08, 2023


## தீ பரவட்டும்! தீமை விலகட்டும் !

வழக்கறிஞர் இராம. வைரமுத்து



## கல்வி நிறுவனங்களா, பள்ளி அறைகளா?

சாரதாதேவி

## தேவையில்லை இங்கே சுரங்கம்

தலையங்கம்

## பொதுச் செயலாளர் வேண்டுகோள்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● ஏப்ரல் 08, 2023 Weekly E-paper ● April 08, 2023


# தீ பரவட்டும்! தீமை விலகட்டும் !

## வழக்கறிஞர் இராம. வைரமுத்து



இட ஒதுக்கீட்டின் அடிப்படையைத் தகர்த்து, சமூகநீதிக்கு சாவு மணி அடிக்கும் பாசிச பா.ஜ.க அரசை எதிர்க்கும் வண்ணம் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் 2022 ஆம் ஆண்டு பிப்ரவரியில் “சமூக நீதிக்கான அகில இந்திய கூட்டமைப்பு” என்ற அமைப்பில் இணையுமாறு வேண்டுகோள் விடுத்து 37 கட்சிகளுக்கு கடிதம் எழுதி இருந்தார். அதன் தொடர்ச்சியாக ஒருங்கிணைப்பாளர் மற்றும் அமைப்பாளராக ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் வி.ஈஸ்வரய்யா, ஒருங்கிணப்பாளராகத் தி.மு.க மாநிலங்களவை உறுப்பினர் வில்சன் ஆகியோரைக் கொண்டு இந்த அமைப்பு உருவானது.

இதன் சார்பில் “சமூக நீதிப் போராட்டத்தை முன்னோக்கி எடுத்துச் செல்வது மற்றும் சமூக நீதி திட்டத்தின் தேசிய செயல்பாடுகளில் இணைவது” என்ற கருப்பொருளுடன் முதல் தேசிய மாநாடு 03.04.2023 அன்று டெல்லியில் நடைபெற்றது. தேசிய அரசியலில் மிகுந்த கவனத்தை ஈர்த்திருக்கும் இந்த நிகழ்வில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின், ராஜஸ்தான் முதல்வர் அசோக் கெலாட், ஜார்க்கண்ட் முதல்வர் ஹேமந்த் சோரன், பீகார் துணை முதல்வர் தேஜஸ்வி யாதவ், காங்கிரஸ் மூத்த தலைவர் வீரப்ப மொய்லி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய பொதுச் செயலாளர் சீத்தாராம் யெச்சூரி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய பொதுச் செயலாளர் டி.ராஜா, சமாஜ்வாதி கட்சியின் தலைவரும், உத்தரப்பிரதேச மாநில எதிர்க்கட்சித் தலைவரும் அகிலேஷ் யாதவ், தேசிய மாநாட்டுக் கட்சியின் தலைவர் பஃரூக் அப்துல்லா, திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் டெரிக் ஓ பிரெய்ன், திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, ம.தி.மு.க பொதுச்செயலாளர் வை.கோ உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் நேரிலும் காணொலி வாயிலாகவும் கலந்து கொண்டு உரையாற்றினர்.

ஜாதியால் ஒடுக்கப்பட்டவர்களை அதன் அடிப்படையில் முன்னேற்ற வேண்டும் என்பதால் இட ஒதுக்கீடு வழங்கப்படுகிறது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 340 வது பிரிவு மற்றும் பின்னாளில் மேற்கொள்ளப்பட்ட அரசியலமைப்புச் சட்டத் திருத்தமும் இதையே உறுதி செய்கிறது. இந்நிலையில் பா.ஜ.க அரசு வஞ்சகமாக உயர்ஜாதியினருக்கு பொருளாதார அடிப்படையில் இட ஒதுக்கீடு வழங்கியது. அத்துடன் மெரிட் அடிப்படையில் வாய்ப்பு பெறும் இட ஒதுக்கீடு பிரிவினர் திறந்த போட்டி (Open Quota) மூலம் அனுமதிக்கப்படாமல் அவரவர் இட ஒதுக்கீடு பிரிவில் அனுமதிக்கப் படுகின்றனர். இதனால் உயர்ஜாதியினர் கூடுதல் வாய்ப்பை பெறுகின்றனர். இது வரை “We are deserved. Not Reserved” என்றும், இட ஒதுக்கீட்டால் நாட்டின் தகுதியும் தரமும் பாழாகி விட்டது என்றும் சொல்லிக் கொண்டிருந்த உயர்ஜாதியினர், இன்று இவ்வாறு இட ஒதுக்கீட்டின் பலனை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இதனால் ஏற்படும் தீமைகளை விளக்கி, சமூக நீதி மற்றும் இட ஒதுக்கீடு குறித்த புரிதலை இந்தியா முழுமைக்கும் ஏற்படுத்திட தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர், மகாத்மா ஜோதிராவ் பூலே ஆகியோரின் பெயர்களில் படிப்பு வட்டங்கள் தொடங்கப்பட வேண்டும் என்று இந்த மாநாட்டில் தீர்மானிக்கப் பட்டுள்ளது. உயர்ஜாதியினருக்கான 10% இட ஒதுக்கீட்டை ரத்து செய்வதற்கான முதல் படியாக ஜாதி வாரி கணக்கெடுப்பு உடனடியாக நடத்தப்பட வேண்டும் என்றும், தனியார் துறையிலும் இட ஒதுக்கீடு அமல்படுத்தப்பட வேண்டும் என்றும், கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் பதவி உயர்வில் இட ஒதுக்கீடு முறையாக அமல்படுத்தப்படுகிறதா என்பதை

தொடர்ச்சி 2ஆம் பக்கம்...

# கல்வி நிறுவனங்களா? பள்ளி அறைகளா?

**சாரதாதேவி**




இளம் பருவத்தினர் தங்கள் எதிர்காலத்தை உருவாக்கிக்கொள்ள வந்து தஞ்சமடையும் சரணாலயங்களே கல்வி நிறுவனங்கள். அது பள்ளிகளாக இருந்தாலும், கலை நிறுவனங்களாக இருந்தாலும், கல்லூரிகளாக இருந்தாலும், பல்கலைக்கழகங்களாக இருந்தாலும், அங்கு தான் நம் எதிர்கால சந்ததியினரின் திறமைகளை, அறிவை, கலைகளை, ஆய்வு நோக்கை, வளர்த்தெடுக்கிறோம். மாணவர்களுக்கு அவர்கள் வாழ்வின் மீதான நம்பிக்கையை உறுதிப்படுத்துகிறோம்.

மேம்பட்ட மனிதவளத்தை புத்துருவாக்கம் செய்து இந்தச் சமூகத்தின் முன்னேற்றத்திற்குத் தொடர்ச்சியாக வழங்கி வருபவை கல்வி நிறுவனங்களே! அத்தகைய கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியப் பெருமக்கள் எவ்வாறு மாணவச் செல்வங்களை நடத்த வேண்டும்? குருகுலக் கல்வி பயிற்று முறையிலிருந்து, நிறுவனப் பயிற்று முறைக்கு மாறி, கல்வியில் சனநாயகப் பண்புகளை வளர்த்தெடுத்து வரும் இவ்வேளையில், மாணாக்கரின் மீதான பாலியல் வன்முறைகள், சீண்டல்கள், என வெளிவரும் செய்திகள் பேரதிர்ச்சியைத் தருகின்றன.

2021இல் சென்னை, பத்மா சேஷாத்ரி பால பவனில் முன்னாள் மாணவர்கள் அளித்த புகாரின் பேரில், ஆசிரியர் இராஜகோபால் என்பவர் பாலியல் குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டார். சென்ற ஆண்டு, ஒரு கிறித்துவ பாதிரியார் சில மாணவர்களிடம் அத்துமீறி நடந்து கொண்டதற்காகக் கைது செய்யப்பட்டார். இதோ இந்த ஆண்டு தொடங்கியவுடன், சென்னை கலாஷேத்ரா மாணவிகள் போர்க்கோலம் பூண்டு தங்கள் நிறுவனத்தில் நடக்கும் பாலியல் அத்துமீறல்களை வெளிக்கொண்டு வந்திருக்கின்றனர். ஒரு ஆசிரியர் கைது செய்யப்பட்டிருக்கிறார். மேலும் சில ஆசிரியர்கள் தேடப்பட்டு வருகின்றனர்.

ஆசிரியரை, தங்கள் பெற்றோருக்கு அடுத்தபடியாக தங்கள் நலன் நாடுபவர்களாகப் பார்க்கும் மாணவ சமுதாயத்தை, தங்கள் காம இச்சைகளுக்கான இலக்காக ஒரு ஆசிரியர் எவ்வாறு பார்க்க இயலும்? அவர்கள் எளிய இலக்காக அமைந்து விடுவார்கள் என்று ஆசிரியர் துணிவு கொள்வது எவ்வாறு? இவை, சாதிய, மதக் கட்டுமானத்தில் பின்னிக் கிடக்கும் இச்சமூக அமைப்பின் கோளாறுகளே!.

தமிழ்நாடு அரசு, பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகும் மாணவருக்கு உதவ, அவசர உதவி எண் 14417 ஐ பாடப் புத்தகங்களின் அட்டைகளிலேயே அச்சிட உத்தரவிட்டது. சென்ற ஆண்டிலிருந்தே அவை அச்சிடப்பட்டுள்ளன. துணிவுடனும் நம்பிக்கையுடனும் மாணவர்கள் தங்கள் மீதான பாலியல் சுரண்டல்களை வெளிக்கொணர்வதை ஊக்குவிப்பதும், அவர்களுக்கான பாதுகாப்பையும், தீர்வையும் உறுதி செய்வதும் அரசின் கடமை!

வேறுபட்ட வர்க்க, ' சாதியப் பின்புலங்களிலிருந்து வரும் மாணவர்களை ஒன்று போல் கருதி, அவர்களிடம் ஏற்கனவே இருக்கும் சமூகப் புரைகளை நீக்குவதே "ஆசு இரிய"ப் பணி! அதை விடுத்து தாமே இன்னும் பல மாசுகளை மனத்தில் இருத்திக்கொண்டு மாணவச் சமூகத்தைத் தன் சுயநலத்துக்குப் பயன்படுத்துவோரை தகுந்த கண்காணிப்பு நடைமுறைகள் கொண்டு நீக்குவதும், தண்டிப்பதும் நன்று. ஆசிரியப் பெருமக்களை பணிக்கு எடுக்கு முன், அவர்களுக்கு சமூகம் குறித்த, மாணாக்கர் குறித்த சமத்துவ, பாதுகாக்கும் சீரிய பார்வை இருக்கிறதா என அறிய நேர்முகத் தேர்வு ஒன்றைக் கட்டாயமாக்குதல் நலம்! ●

---

முன் பக்க தொடர்ச்சி

*ஆய்வு செய்ய பேராசிரியர் சுப.வீரபாண்டியன் தலைமையில் செயல்படும் தமிழ்நாடு அரசின் 'சமூக நீதி கண்காணிப்புக் குழு' போல் அனைத்து மாநில அரசுகளும் ஒரு குழுவை அமைக்க வேண்டும் என்றும் இம்மாநாட்டில் ஆலோசிக்கப்பட்டது. கூட்டமைப்பின் சார்பில் நாடு முழுவதும் மாநாடுகள் நடத்துவது என்று முடிவெடுக்கப்பட்டது. அடுத்த மாநாட்டை பீகாரில் நடத்த அம்மாநில துணை முதல்வர் தேஜஸ்வி யாதவ் விருப்பம் தெரிவித்துள்ளார்.*

*பா.ஜ.கவின் 44 ஆவது நிறுவன நாள் விழாவில் உரையாற்றிய பிரதமர் மோடி "எதிர்க்கட்சிகள் சமூகநீதி நாடகம் நடத்துகின்றன" என்று புலம்பியிருப்பதைப் பார்க்கும் போது இந்த மாநாட்டின் எழுச்சி ஆட்சியாளர்களை*



அகிலேஷ் யாதவ்




பஃரூக் அப்துல்லா

*அதிர வைத்து இருக்கிறது என்பதை உணர முடிகிறது. பா.ஜ.கவின் ஊதுகுழலான தினமலர் நாளிதழ் "காங்கிரசை சிறுமைப்படுத்தினாரா ஸ்டாலின்" என்று இம்மாநாடு குறித்து வெளியிட்டுள்ள செய்தி அவர்களின் பயத்தையும், பதட்டத்தையும் காட்டுகிறது.*

*தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் வழியில் திராவிட மாடல் நாயகர் மு.க.ஸ்டாலின் தலைமையேற்றிருக்கும் இந்த போர்ப்படை சமூகநீதிக் களத்தில் வென்று சரித்திரம் படைக்கும். "சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல்" என்ற குறள் வழியில் நடுவு நிலைமையோடு அனைத்து மக்களையும் பாதுகாக்கும் அரசு, ஒன்றியத்தில் அமைந்திட*

*இம்மாநாட்டில் பற்றிய தீ இந்தியா முழுமைக்கும் பரவட்டும். தீமை விலகட்டும் !!* ●

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## தேவையில்லை இங்கே சுரங்கம்.

அண்மையில் ஒன்றிய அரசின் சுரங்கத்துறை ஓர் ஏல அறிவிப்பை வெளியிட்டு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கடலூர் மாவட்டம் கிழக்கு சேத்தியாதோப்பு, அரியலூர் மாவட்டம் மைக்கேல்பட்டி, தஞ்சை மாவட்டம் ஒரத்தநாடு, வடசேரி உள்ளிட்ட டெல்டா விளை நிலங்களில் பழுப்பு நிலக்கரி தோண்டி எடுப்பதற்கான ஏல அறிவிப்பு அது.

இதனால் ஏறத்தாழ ஒன்றரை லட்சம் ஏக்கர் விளை நிலங்கள் அழிக்கப்பட்டு விடும் அபாயம் ஏற்பட்டு உள்ளது.

இது குறித்து மோடி அரசு தமிழ்நாடு அரசுடன் கருத்துக் கேட்கவோ, பேசவோ இல்லை என்பது இன்னொரு அதிர்ச்சி. இது மாநில சுயாட்சிக்கு எதிரானது.

அதுவும் இந்திய ஒன்றியத்தின் நெற்களஞ்சியமாக விளங்கும் காவிரி டெல்டா விளைநிலங்கள் பாதுகாக்கப்பட்ட மண்டலங்களாகத் தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்ட நிலப்பகுதிகள்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உடனடியாகப் பிரதமருக்கு மறுப்பு தெரிவித்துக் கடிதம் எழுதியிருக்கிறார்.

அதுமட்டும் இல்லாமல் சட்டமன்றத்தில் “நானும் டெல்டா காரன்தான் “ என்ற ஒரு சொல்லின் மூலம், நிலக்கரிச் சுரங்கம் தோண்டக் கடுமையாக மறுப்பு




தெரிவித்து இருக்கிறார்.

தமிழ்நாட்டின் கடும் எதிர்ப்பினால் மத்திய அரசு மறுபரிசீலனை செய்வதாக செய்தி வந்துள்ளதாகவும் நம் முதல்வர் சட்டமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

தமிழ்மீதும், தமிழர்கள் மீதும் அக்கரை காட்டுவதாகச் சொல்லிக் கொள்ளும் பிரதமர் மோடியின் வேடம் மீண்டும் கலைந்து விட்டது.

தமிழர்களின் விளைநிலங்களை அழித்து, தமிழர்களின் வாழ்க்கையை அழிக்கும் நிலக்கரிச் சுரங்கம் தமிழ்நாட்டுக்குத் தேவை இல்லை.

உடனே இந்தத் திட்டத்தை ஒன்றிய அரசு கைவிட வேண்டும். ஏல அறிவிப்பைத் திரும்பப் பெற வேண்டும்.

ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**
பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**
ஆசிரியர் குழு:
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**
**சாரதா தேவி**
வெளியீடு: திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

# பொதுச் செயலாளர் வேண்டுகோள்

தோழர்கள் அனைவருக்கும் என் அன்பு வணக்கம். ஏப்ரல் மாதம் என்பது நம் பேரவையின் மாதம் என்பதை அனைவரும் அறிவோம். ஓர் இயக்கம் பல்வேறு தளங்களிலும் வலிமை பெற வேண்டும். அவற்றுள் நிதித்துறை என்பதும் முதன்மையானது.


பொருள் இல்லாருக்கு இவ்வுலகம் இல்லை. எனவே நம் பேரவையின் ஒவ்வொரு உறுப்பினரும் தன்னால் இயன்ற ஒரு தொகையைப் பேரவைக்குக் கொடையாகத் தருகின்ற மாதம் இது.



இப்போதே உங்கள் நன்கொடைகள் வரத்தொடங்கி விட்டன என்பதை அறிந்தேன், தொடர்க! இம்மாத இறுதிக்குள் தொகை செலுத்தாத ஒருவர் கூட இல்லை எனும் நிலையை உருவாக்குங்கள். நிதி என்பது வலிமை! நிதி என்பது தேவை! நிதி என்பது செயல் ஊக்கம்! உங்கள் அனைவரிடம் இருந்தும் அந்த ஆதரவை எதிர்நோக்கிப் பேரவை நிற்கிறது. நன்றி, வணக்கம்!

– **சுப.வீரபாண்டியன்**
பொதுச் செயலாளர்
( இலண்டனில் இருந்து)

## வைக்கம் நூற்றாண்டு, பெரியார்



ஏப்ரல் 13, 1924 : வைக்கத்திலிருந்தவர்களின் அழைப்பை ஏற்று, பெரியார் வைக்கம் வந்து சேர்ந்தார்.

"தமிழ்நாட்டுத் தலைவர்களும் தொண்டர்களும் வைக்கத்திற்கு வாருங்கள். இது ஒரு நல்ல வாய்ப்பு. உன்னத இலட்சியத்திற்கு உழைக்க வாருங்கள்" என்று தமிழ்நாட்டினருக்கும் பெரியார் அறிக்கை (சுதேசமித்திரன், 15.04.1924;

ஏப்ரல் 16, 1924 : வைக்கம் சத்தியாக்கிரகம் குறித்து காங்கிரஸ் தீண்டாமை விலக்குக் குழுவில் பெரியார் விளக்கவுரை.

மே 15, 1924 : இரண்டாவது முறையாக மனைவி நாகம்மையாருடன் வைக்கம் பயணம். தீவிரப் பிரச்சாரம்.

மே 22, 1924 : பெரியாருக்கு ஒரு மாத கால வெறுங்காவல் தண்டனை வழங்கப்பட்டது.

மே 23, 1924 : நாகம்மையார், எஸ். ஆர். கண்ணம்மாள் ஆகியோர் வைக்கம் சத்தியாக்கிரகத்தில் கிளர்ச்சி.

ஜூன் 10, 1924 : பார்ப்பனர்களும், நாயர்களும் கூடி சத்தியாக்கிரகிகள் நாசமாக வேண்டி சத்துரு சம்ஹார யாகம்.

ஜூன் 21, 1924 : பெரியார் சிறையிலிருந்து விடுதலை.

ஜூலை 16, 1924 : பெரியாருக்கு நான்கு மாதம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.


ஆகஸ்ட் 30, 1924 : பெரியார் விடுதலை.

நவம்பர் 27, 1925 : சத்தியாக்கிரகப் போராட்டம் முழு வெற்றி பெற்றது. கோயிலைச் சுற்றியுள்ள எல்லாப் பாதைகளும் அனைத்து ஜாதியினருக்கும் திறந்து விடப்பட்டது.

நவம்பர் 29, 1925 : வைக்கம் வெற்றி விழாவில் நாகம்மையாருடன் கலந்து கொண்ட பெரியார், நமது நோக்கம் அனைத்து ஜாதியினரும் சாலைகளில் நடக்க உரிமை பெறுவது மட்டுமன்று, அனைவரும் கோயில்களில் நுழைய உரிமை பெற வேண்டும் என்று குறிப்பிட்டார்.

- வெற்றிச்செல்வன்

## அம்பேத்கர், 132 ஆம் பிறந்த நாள்



14-04-1891 : அன்னை பீமாபாய் - தந்தை சுபேதார் மேஜர் இராம்ஜீ அம்பேத்கர் தம்பதியின் 14 ஆம் குழந்தையாக, அன்றைய மத்திய பிரதேச மாநில Military Headquarters of War - MHOW, மாவ் என்ற இடத்தில் பிறந்தார் பி.ஆர்.அம்பேத்கர்.

20-07-1924: "கற்பி - கிளர்ச்சி செய் - ஒன்றுசேர்" என்ற முழக்கத்தை முதன் முதலாக முன்வைத்து 'ஒடுக்கப்பட்டோர் மேம்பாட்டுப் பேரவை' யைத் தொடக்கி வைத்தார்.

ஜூன் 1927: அனைத்து இந்துக்களுக்கும் திறந்துவிடப்பட்ட 'தாருர்த்வார்' கோயிலுக்குச் செல்ல முன் அனுமதி வாங்கியிருந்தும், சிவதர்கருடன் கோயிலுக்குச் சென்ற அம்பேத்கர் கடுமையாகத் தாக்கப்பட்டு, வெளியே தள்ளப்பட்டார்.

13-10-1935 : பம்பாயில் இயோலா மாநாட்டில், இந்து மதத்தில் உள்ள சமத்துவமின்மைதான். நான் இந்து மதத்தை விட்டு வெளியேற வேண்டும் என்று எண்ணுவதற்குக் காரணமாகும். தீண்டாமை எனும் கறையுடன் நான் இந்துவாகப் பிறந்து விட்டேன். ஆனால் இந்துவாகச் சாக மாட்டேன் என்று அறிவித்தார்

08-01-1940 : பம்பாயில் தந்தை பெரியார் தன் தோழர்களுடன் அம்பேத்கரைச் சந்தித்தார்கள். அந்த சந்திப்பில் முகமத் அலி ஜின்னாவும் இருந்தார்.

14-10-1956 : நாகபுரியில் அம்பேத்கரும் அவரின் துணைவர் சவிதாவும் வெள்ளை உடையணிந்து, குசிநாராவைச் சேர்ந்த பிக்கு மகாஸ் தவீர் முன்னிலையில் காலை 9.30 மணிக்கு பௌத்தம் தழுவினார்கள். அவர்களுடன் 5 இலட்சம் பேர்கள் பௌத்தம் தழுவினர்.

06-12-1956: அண்ணல் டாக்டர் அம்பேத்கர் அவர்கள் டில்லி, அலிப்பூர் சாலையிலுள்ள அவரின் இல்லத்தில், இரவு 9 மணிக்குத் தூக்கம் கலையாமல் மரணமடைந்தார்.

-எழில்



## ஆளுநர் பதவி விலக வேண்டும்

*மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிகள், சட்டமன்றத்தில் விவாதித்து நிறைவேற்றப்பட்ட சட்டங்கள், திருத்தச் சட்டங்கள், அவசரச் சட்டங்களுக்குக் கையெழுத்திட வேண்டிய கடமையும், பொறுப்பும் ஆளுநருக்கு இருக்கிறது. அதை விட்டுவிட்டு (ரம்மிதடை) சட்டம் இயற்றும் அதிகாரம் மாநிலத்திற்கு இல்லை என்று சொல்வதும், சட்ட முன்வடிவுகளை கிடப்பில் போடுவதும் ஆளுநரின் வேலையில்லை. அண்மையில் ஆளுநர் மாளிகையில் ஆர்.என்.ரவி குடிமைப்பணி மாணவர்களிடம், சட்டத்தை கிடப்பில் போடுவது என்பது அதை நிராகரிப்பது என்பதன் பொருள் என்றும், ஸ்டெர்லைட் ஆலை குறித்தும் பேசியிருக்கிறார். இது ரகசியக் காப்பு உறுதி மொழியை மீறிய செயல் ஆகும். ஆளுநரின் இப்படிப்பட்ட பேச்சும், போக்கும் வன்மையான கண்டனத்திற்கு உரியது.* ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian